மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், பல்லடம்
அ.வ.எண். 195/2007

பெயர் : கருணாகரன்
சாட்சி – பி.வா.சா–4 நாள்: 31.10.2025

---

**குறுக்கு விசாரணை (4 முதல் 7 பிரதிவாதிகள் தரப்பு)**

1. எனக்கு பத்திரங்கள் தயாரிக்கவோ, தட்டச்சு செய்யவோ தெரியாது. பத்திரம் தயாரிக்க உரிமம் எதுவும் நான் வாங்கவில்லை. நான் 2007 ம் ஆண்டு வரை ஓட்டுனராக பணிபுரிந்தேன். அதன் பின்னர் எனக்கு பக்கவாத நோய் 2007 ம் ஆண்டு கடைசியில் வந்ததால் பணிபுரிய முடியவில்லை. எனக்கு கை, கால்கள் தற்போதும் சரியாக இயங்க வில்லை. 2007 ம் ஆண்டு முதல் இதே நிலையில் தான் உள்ளேன்.

2. நான் 28.02.2007 தேதியில் சுப்பிரமணியம் என்பவர் பெயருக்கு விடுதலை பத்திரத்தை தயார் செய்து எழுதிக்கொடுத்தேனா என்றால் இல்லை. நான் மற்றும் வாதிகள் சேர்ந்து 4 ம் பிரதிவாதி சுப்பிரமணியம் பெயருக்கு தலா ரூபாய் 10,000 பெற்றுக்கொண்டு விடுதலை பத்திரம் எழுதிக் கொடுத்துள்ளதாக 4 முதல் 7 பிரதிவாதிகள் சொல்கிறார்கள் என்றால் நாங்கள் எந்த பத்திரமும் எழுதிக் கொடுக்கவில்லை போலியாக தயார் செய்துள்ளார்கள்.

3. வாதிகள் சுப்பிரமணியம் பெயருக்கு விடுதலை பத்திரம் எழுதிக்கொடுத்தார்களா என்றால் இல்லை. என்னிடம் காட்டப்படும் பி.வா.சா.ஆ.1 விடுதலை பத்திரம் நாங்கள் எழுதிக்கொடுத்தா என்றால் இல்லை மோசடியாக தயார் செய்தது. மேற்படி பத்திரத்தை நான் தான் தயார் செய்ததாக எழுதப்பட்டுள்ளது என்றால் நான் எந்த பத்திரமும் தயார் செய்யவில்லை. பி.வா.சா.ஆ.1 ஆவணத்தில் உள்ள வாசகங்கள் உண்மை அல்ல பொய்யானவை. சுப்பிரமணியம் எங்களுக்கு பி.வா.சா.ஆ.1 ஆவணத்தில் குறிப்பிட்டுள்ளவாறு பணம் ஏதேனும் கொடுத்தாரா என்றால் இல்லை.

4. பி.வா.சா.ஆ.1 ஆவணத்தில் குறிப்பிட்டுள்ளவாறு சுவாதீனத்தை சுப்பிரமணியத்திடம் நாங்கள் ஒப்படைத்தோமா என்றால் இல்லை. சொத்துக்கள் எங்களது கூட்டு சுவாதீனத்தில் தான் உள்ளது. பி.வா.சா.ஆ.1 ஆவணத்தில் யார் யார்

சாட்சி கையெழுத்து போட்டுள்ளார்கள் என்று எனக்கு தெரியாது. சாட்சி கையெழுத்து போட்டுள்ள சாரதி, உதயகுமார் ஆகியோர்களை எனக்கு தெரியுமா என்றால் தெரியாது.

5. தாவா 1வது அயிட்ட சொத்திற்கான பட்டா அனைவரது பெயரிலும் கூட்டாகத்தான் உள்ளது. தாவா சொத்தில் எனக்கு மற்றும் எனது மகன்களுக்கு கூட்டாக பொதுவில் 6/25 பாகம் உள்ளது. வாதிகளுக்கு கூட்டாக பொதுவில் 13/25 பாகம் உள்ளது என்றால் சரிதான். தாவா சொத்து தற்போது வரை பாகம் பிரிக்கப்படாமல் கூட்டு சுவாதீனத்தில் தான் உள்ளது.

6. 4 முதல் 7 பிரதிவாதிகள் நான் ஆவணத்தை தயார் செய்து வாதிகளிடம், ஆவணத்தை படித்து பார்த்து அவர்கள் வாசகங்களை புரிந்து கொண்டு நாங்கள் விடுதலை பத்திரம் விருப்பப்பட்டு எழுதிக் கொடுத்ததாக சொல்லியுள்ளார்கள் என்றால் அந்த ஆவணமே மோசடியாக தயார் செய்யப்பட்ட ஆவணம் ஆகும். யாரும் ஆவணத்தை படித்து காண்பிக்கவில்லை.

7. எவ்வாறு எங்கள் கையெழுத்து ஆவணத்தில் உள்ளது என்றால் அதே தேதியில் நாங்கள் ஒரு ஆவணத்தை வேறு சொத்துக்களை பொறுத்து கிரையம் எழுதி கொடுத்தோம். அந்த ஆவணத்துடன் சேர்த்து எங்களுக்கு தெரியாமல் கையெழுத்தை வாங்கி ஆவணத்தை மோசடியாக தயார் செய்துள்ளார்கள். எனவே, மேற்படி ஆவணமே செல்லாது என்றும், நடைமுறைக்கு வராத ஆவணம் என்றும் சொன்னால் சரியல்ல. வாதிகள் கோரிய பாகப்பிரிவினை வழக்கை அனுமதித்து பாகம் பிரிப்பதில் எனக்கு எந்த ஆட்சேபனையும் இல்லை.

**குறுக்கு விசாரணை முடிவடைந்தது**

**மறு விசாரணை இல்லை**

இன்று திறந்த நீதிமன்றத்தில் என் முன்பாக சாட்சி விசாரிக்கப்பட்டு தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சியால் படித்து பார்க்கப்பட்டு சரி என்றும் என் முன்பு கையெழுத்து செய்தும் ஒப்புக் கொள்ளப்பட்டுள்ளது.

V KALIDASAN

Digitally signed by V KALIDASAN
Date: 2025.10.31 18:13:30 +0530

மாவட்ட உரிமையியல் நீதிபதி,

பல்லடம்.